IN THE EXAMINATION OF THE WITNESS
(Section 281 Code of Criminal Procedure)
THE JUDICIAL MAGISTRATE COURT, VALLIYOOR

Calender **Crl MP.855/2025 in DVC. 09/2023** **PW.1**
Miscellaneous :
Preliminary Register :

STATEMENT OF WITNESS

Name : திருமதி. அமராவதி
Husband's Name : திரு. மாசான முத்து
Village : இரஜகிருஷ்ணாபுரம்
Taluk : இராதாபுரம்
Employment : இல்லத்தரசி
Age : 50 Date:21.11.2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 on today.

**<u>சத்திய பிரமாண வாக்குமூலம்</u> :– (223 BNNS)**

1. நான் இரஜகிருஷ்ணாபுரத்தில் வசித்து இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். எனது கணவருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் DVC 17/2013 ஆக மனுதாக்கல் செய்தேன், அதில் இடைகால ஜீவனாம்சம் கோரி மனுதாக்கல் செய்து கடந்த 28.03.2013 அன்று எனக்கு மாதம் ரூ. 3000/– குழந்தைகளுக்கு தலா ரூ. 2000/– வீதம் ஆக மொத்தம் ரூ. 7000/– அசல் மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து கொடுக்க உத்தரவு இடப்பட்டது. ஆனால் எதிர்மனுதாரர் பணம் எதுவும் தராமல் இருந்து வந்தார். இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து எதிர்மனுதாரர் மீது கைது நடவடிக்கை மேற்கொண்ட போது எதிர்மனுதாரரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய போது இந்நீதிமன்ற உத்தரவு படி 2016ம் வருடம் ரூ. 1,00,000 மட்டும் கொடுத்தார். அதன் பின்னர் பணம் எதுவும் தரவில்லை.

2) பின்னர் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ள மேல் முறையீட்டு வழக்கானது கடந்த 09.08.2016 ம் அன்று தள்ளுப்படி

செய்யப்பட்டு இந்நீதிமன்ற உத்தரவை உறுதிப்படுத்தினார்கள். இந்நிலையில் இராதாபுரத்தில் புதிதாக நீதிமன்றம் தொடங்கப்பட்டதால் இந்த வழக்கு இராதாபுரம் நீதிமன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது அங்கு வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டது. அதன் பின்னர் எல்கை வரையறை காரணமாக இந்நீதிமன்றத்திற்கு திரும்பவும் அனுப்பபட்டு DVC No,. 9/2023 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டது. அதன் பின்னர் 2 முதல் 4 எதிர்மனுதாரர்கள் மதுரை உயர் நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்து கடந்த 09.03.2023 அன்று தள்ளுப்படி செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் இந்நீதிமன்ற உத்தவை நிறைவேற்றாமல் இருந்து வருகிறார். எதிர்மனுதாரர் எனக்கு ரூ. 9,50,000/– ஜீவனாம்சம் தொகை தர வேண்டி உள்ளது. எதிர்மனுதாரருக்கு போதிய பண வசதி இருந்தும் வேண்டுமென்றே ஜீவனாம்சம் தொகையை தராமல் இருந்து வருகிறார். எனவே எதிர்மனுதாரர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கவேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளேன்.

Taken down me in open court in the presence of the accused read over to the deponent and admitted by him/her to be correct.

MOSES JEBASINGH

Digitally signed by MOSES JEBASINGH
Date: 2025.11.21 17:50:08 +0530

Judicial Magistrate,
Valliyoor.